# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## அல்ஹசன் மன்றம் (கூட்டிணைத்தல்)

**அல்ஹசன் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஹுனைஸ் பாறூக் அவர்களால் 2013, யூலை மாதம் 23 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, யூலை மாதம் 15 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **259 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : 5.00**

2-PL 007470 -350 (2013/07)

## அல்ஹசன் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

"அல்ஹசன் மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவது மான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் ;

அத்துடன், சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின்   ஆம் இலக்க, அல்ஹசன் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*அல்ஹசன் மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அல்ஹசன் மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "அல்ஹசன் மன்றம்" என்ற பெயரின் கீழும், மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன், அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

2-PL 007381 - 45 (2013/06)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) மன்றத்தின் நோக்கத்தை எய்துவதற்காக இஸ்லாமிய சமய பாடசாலைகள், வகுப்புக்கள், புத்தக விற்பனை நிலையங்களைத் தாபித்தல் ;

(ஆ) இஸ்லாமிய சன்மார்க்கம் மற்றும் பண்பாடுகளை கற்பதற்கும் கற்றலை ஊக்குவித்தலும் அவற்றின் மூலம் சமூகத்துக்கும் நாட்டுக்கும் தொண்டாற்றலும் ;

(இ) குர்ஆனைக் கற்றுக்கொடுப்பதுடன் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறையினை பின்பற்ற ஊக்குவித்தல் ;

(ஈ) பொருளாதாரத்தை வளர்ப்பதற்காக முஸ்லிம்களிடையே ஸக்காத் வசூலிக்கப்பட்டு அதனைப் பகிர்தல் ;

(உ) வயது வந்தவர்கள் மத்தியில் இஸ்லாமிய சன்மார்க்கத்தைப் போதித்தலும், குர்ஆன் ஓதுதலை கற்றுக் கொடுத்தலும் ;

(ஊ) முஸ்லிம்களிடையே பிணக்குகள் ஏற்படும் பட்சத்தில் அவற்றை இஸ்லாமிய முறைப்படி தீர்ப்பதற்காக ஒரு சபையை உருவாக்கல் ;

(எ) சிறந்த நூல்நிலையம் ஒன்றை உருவாக்கி நடாத்துதலும் அதற்கான புத்தகங்களை சிங்கள, தமிழ் மொழிகளில் மொழிமாற்றம் செய்தலும் ;

(ஏ) அறபுக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள், கற்பிக்கும் ஆசிரியர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை வளர்ப்பதற்கான தொழில்நுட்ப நிறுவனங்களை அமைத்தல் ;

(ஐ) மேற்குறிப்பிட்ட அம்சங்களை அமுல்படுத்த தேவையான பண வசதிகளையும், நன்கொடைகளையும் சேகரித்தல் ;

(ஒ) சேகரிக்கப்பட்ட நிதியின் மூலம் புலமைப் பரிசில்கள், வழிகாட்டல் வகுப்புகள், கல்வித் தேவைகள் போன்ற வற்றை நிறைவேற்றல் ; அத்துடன்

(ஓ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக் கோள்களைக் கொண்ட ஏதேனும் வெளிநாட்டு அல்லது உள்நாட்டு நிறுவனங்கள் அல்லது அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து செயலாற்றுதலும் பங்குபற்றுதலும்.

கூட்டுத்தாப னத்தின் பொதுவான தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்தலான வேறேதேனும் சட்டத்தின தும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவையேனுமொன்றை மேம்படுத்துவதற்கும், முன்னேற்றுவதற்கும் அவசியமான வாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்தவற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அத்துடன் கீழ்க்காணும் விடயங் களையும் மேற்கொள்வதற்கான அதிகாரத்தையும் கூட்டுத் தாபனம் கொண்டிருத்தல் வேண்டும் :

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப் படும் காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள் வனவு செய்வதற்கும், சுவீகரிப்பதற்கும், வாடகைக்குக் கெடுப்பதற்கும், நிறுவுவதற்கும் அல்லது வேறு வகையில் பெறவும் ;

(ஆ) உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிதியைக் கடன் பெறவும் கொடைகளையும், நன்கொடைகளையும் அன்பளிப்புகளையும் காசாகவோ பொருட்களாகவோ பெற்றுக்கொள்ளவும் ;

(இ) செலாவணி, உண்டியல்கள், காசோலைகள், வாக்கு றுதிப்பத்திரங்கள், வேறு கொடுக்கல், வாங்கல்களைச் செய்யக்கூடிய சாதனங்களைத் தயாரித்தல், எழுதுதல், கையேற்றல், கழிவுகளை வழங்குதல், கொடுக்கல் வாங்கல் செய்தல், கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல் அத்துடன், வங்கியில் நடைமுறை, சேமிப்பு மற்றும் வைப்புக் கணக்குகளைத் திறக்கவும், செயற் படுத்தவும் முடிவுறுத்தவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் நிதியை மன்றம் பொருத்தமெனக் கருதும் வகையில் முதலீடு செய்தல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குவோர், சேவையாளர்கள் ஆகியோரை நியமனஞ் செய்யவும், சேவையில் ஈடுபடுத்தவும், பதவி நீங்கஞ் செய்யவும், அவர்களின் சேவையை முடிவுறுத்தவும், கூட்டுத்தாபனம் தீர்மானிக்கும் சம்பளங்கள், படிகள், பணிக்கொடைகள் என்பவற்றைக் கொடுப்பனவு செய்யவும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக இலங்கையிலும் வெளிநாட்டிலும் ஆட்களைப் பயிற்றுவித்தல் போன்ற விடயங்களை மேற்கொள்ள கூட்டுத்தாபனத்துக்கு அதிகாரமுண்டு ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நடைமுறைப் படுத்திச் செயற்படுத்த அவசியமாகின்றதும் அதற்கு உறுதுணையான அல்லது சாதகமான வேறு பொதுச் செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு கூட்டுத்தாபனத்தின் விதிகளுக் கிணங்க தலைவர், கௌரவ செயலாளர், கௌரவ பொருளாளர் ஆகியோர் கொண்ட முகாமைத்துவக் குழு ஒன்றினால் நிருவகிக் கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் தலைவர், உபதலைவர், செயலாளர், உபசெயலாளர், பொருளாளர் மற்றும் கூட்டுத்தாப னத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய தேர்ந்து நியமிக்கப்படும் ஏழு உறுப்பினர்களையும் கொண்ட பணிப்பாளர் சபை என அழைக்கப்படும் நிறைவேற்று சபை ஒன்றினால் இச்சட்டத்தினதும் ஏனைய ஏற்பாடுகளுக்கும் அமைய நிரு வகிக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய தினத்தன்று பதவிவகிக்கும் நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்கள், முதலாம் முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்துதல், உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) பதவி தாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், அவர்கள் பதவி விலகுதல், பதவியை வறிதாக்குதல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் அத்துடன், அவர்களின் தத்துவங்கள், நடத்தை மற்றும் கடமைகள்;

(இ) நிருவாக சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்தல், அதன் தத்துவங்கள், நடத்தை மற்றும் கடமைகள் அத்துடன் நிருவாக சபை உறுப்பினர்களின் கால எல்லை ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களின், முகவர்களின் மற்றும் சேவையாளர்களின் தத்துவங்கள், நடத்தை, கடமைகள் மற்றும் பணிகள் ;

(உ) நிருவாக சபையின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை கூட்டங்களைக் கூட்டி நடாத்துதல், அக்கூட்டங்கள் இடம்பெறும் இடங்கள், நேரம், அக்கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்கள், நிகழ்ச்சி நிரல்கள், கூட்ட நிறைவெண், இடம்பெறவுள்ள விடயங்களும் அக்கூட்டங்களை நடாத்துதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தல், முகாமை செய்தல், அதன் நிதிகளைக் கட்டுக்காவலில் வைத்திருத்தல், அவற்றுக்கான கணக்குகளைப் பேணுதல், கணக்காய்வு செய்தல் ; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல், அதன் குறிக்கோள்களை எய்துதல்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட விதி எதுவும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றென்றாற்போன்று அதேபோன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அதற்கெதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் அப்போதைக்கு வலுவிலிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

மன்றத்தின் நிதியம்.

**7**. மன்றத்துக்கென நிதியமொன்று இருத்தலுடன், அது -

(அ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொது அல்லது தனிப்பட்ட சங்கங்கள் மூலமோ தனிப்பட்டவர்களாலோ கிடைக்கப்பெற்ற பணங்கள் ;

(ஆ) சங்கத்தின் சகல செலவுகளும் இந்நிதியத்திலிருந்து செலவிடப்படல் வேண்டும் ;

(இ) சங்கத்தின் அலுவல்களுக்காக அவசரமாகத் தேவைப்படாத நிதியை எந்தவொரு வங்கியிலோ அல்லது நிதி நிறுவனத்திலோ வைப்பிலிடப்படுவதோடு அதன் மூலம் இலாபமேதும் கிடைத்தால் மன்றத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றப் பயன்படுத்தலாம் ;

(ஈ) வங்கியில் உள்ள சங்கத்தின் கணக்கு அல்லது கணக்குகள், காசோலைகள் மற்றும் எல்லா ஆவணங்களுக்கும் இரு உறுப்பினர்கள் அல்லது ஓர் உறுப்பினர் அல்லது செயலாளர் அல்லது பொருளாளர் கையொப்பமிடலாம்.

**நிறுவனத்துக்கு செலுத்தப்பட வேண்டிய வையும் மற்றும் நிறுவனத்தால் செலுத்தப்படற் பாலனவாகவு முள்ள தனிசுகள்.**

**8.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்துக்குரிய எல்லாத் தனிசுகளும் பொறுப்புக் களும் இத்தால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு செலுத்தப்படற்பாலனவாகவுள்ள எல்லாத் தனிசுகளும் சந்தாப்பணங்களும் ஒப்பப்பணங்களும் இச்சட்டத் தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுத லும் வேண்டும்.

**கணக்குகளும் கணக்காய்வும்.**

**9.** (1) முகாமைச் சபையானது கூட்டுத்தாபனத்தினால் பெறப் பட்ட மற்றும் செலவழிக்கப்பட்ட எல்லாப் பணங்கள் பற்றியும் முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஆகக் குறைந்தது ஒரு தடவையாவது தகுதிவாய்ந்த கணக்காளர் ஒருவரினால் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

**கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்க லாம்.**

**10.** கூட்டுத்தாபனம் ஏதேனும் கொள்வனவு, சந்தாப்பணம், நன்கொடை, மானியக் கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறேதேனும் விதமாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களை இந்தச் சட்டத்தின் நோக்கத்துக்காக கூட்டுத்தாபனத்தின் தற்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமையப்பெறுவதற்கு வைத்திருப்ப தற்கும் சட்டத்தில் இயலுமாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டு மென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களையும் விற்பதற்கும், ஈடுவைப்பதற்கும், குத்தகைக்குக் கொடுக்கவும், பரிமாறிக் கொள்ளவும், வேறு வகையில் கையுதிர்ப்பதற்கும் ஆன முழுத் தத்துவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**கூட்டுத்தாப னத்தின் இலச்சினை.**

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடு செய்யக் கூடியவாறான முகாமைச் சபையின் அத்தகைய எண்ணிக்கை யைக் கொண்ட ஆட்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அப்படிக் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் கடன்கள், பொறுப்புக்கள் அனைத்தையும் திருப்திப்படுத்திய பின்னர் ஏதாவது சொத்து எஞ்சியிருந்தால் அத்தகைய சொத்து கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டிருக்கும் பிற நிறுவனம் அல்லது நிறுவனங்கள் சிலவற்றுக்கு, அந்நிறுவனத்தின் அல்லது அந்நிறுவனங்களின் உறுப்பினர்களிடையே ஏதாவது வருமானத்தை அல்லது சொத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகள் மூலம் தடுக்கப்பட்டிருப்பின், கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

*கலைப்பின் போது எஞ்சியுள்ள சொத்து.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்